# சென்னை முகப்பேர் சீனிவாசப் பெருமாள் கோயில் ஓர் ஆய்வு

**சரித்திரச் செம்மல் ச. கிருஷ்ணமூர்த்தி**
**தொல்லியல் அலுவலர்(ஓய்வு)**
**தமிழ்நாடு தொல்லியல்துறை**
**சென்னை**

சென்னை மாநகரில் புராதனக் கோயில்கள் பல உள்ளன.முகப்பேர் வெள்ளாளர் தெருவில் அருள்மிகு சந்தான சீனிவாசப் பெருமாள் திருக்கோயில் உள்ளது.கி.பி.13 ஆம் நூற்றாண்டில் பிற்காலப் பாண்டியர் ஆட்சியின் போது கட்டப்பட்ட இக்கோயிலில் மூன்று பழைய கல்வெட்டுகள் உள்ளன.திருப்பணி மேற்கொள்வதற்காகத் தொல்லியல் ஆய்வறிக்கை வேண்டி சென்றபோது இக்கல்வெட்டுகளைக் கண்டு நகல் செய்தேன்.தமிழக அரசு தொல்லியல் துறையும் இங்குள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்துள்ளது.

சந்தான சீனிவாசப் பெருமாள் கோயில் கருவறை ,இடைக்கட்டு அதிட்டானப் பகுதிகளில் கல்வெட்டுகள் உள்ளன.கோச்சடையன் சுந்தரபாண்டியன் ,விஜயகண்ட கோபாலன் விஜய நகர வேந்தன் தேவராயன் காலத்தில் சிற்றரசராக இருந்த பொம்மையதேவ மகராயன் ஆகியோருடைய கல்வெட்டுகளே இவைகள் ஆகும்.மேலும் 1949 இல் ஆதிகேசவப் பெருமாள் ஆலயம் இராமச்சந்திரன் சாரங்கராயன் திருப்பணி புரிந்த விபரமுள்ள நவீனகக்கல்வெட்டு கருவறை வடதிசை அதிட்டானம் ஜகதியில் உள்ளது.

கருங்கல் கட்டட அமைப்பில் அதிட்டானம்,பித்தி(சுவர்) உள்ள பகுதி கல்வெட்டுகள் கற்கள் மட்டும் மாற்றிக் கட்டிவிட்டதால் கல்வெட்டின் முழு வரிகளும் கிடைக்கவில்லை.எனினும் கிடைத்துள்ள பகுதி கொண்டு கிடைத்துள்ள பகுதி கொண்டு கீழ்க்கண்ட செய்திகளை அறிய முடிகிறது.ஜயங்கொண்ட சோழ மண்டலம் அல்லது தொண்டை மண்டலம் ,புழல் கோட்டமான விக்கிரம சோழவளநாடு,அம்பத்தூர் நாடு ஆகிய பிரிவுகள் கல்வெட்டுகளில் உள்ளன.

கோச்சடையான் சுந்தர பாண்டியன் ஆட்சியின்போது புழல் கோட்டமான விக்கிரம சோழவள நாட்டு அம்பத்தூர் நாட்டு விசைய நுளம்பியாற்று இளந்திருவேங்கடமுடையார் கோயிலில் இரண்டு விளக்குகள் எரிய வைப்பதற்காக இவ்வூரில் ஆறைவேளான் அம்பத்தூர் நாட்டு மூவேந்த வேளான் நான்கு மாடுகளையும் நான்கு நாகுகளையும் (பெண் கன்று குட்டிகள்) விட்டதோடு இரண்டு விளக்குகளையும் அளித்ததைக் கோயில் கருவறை இடைக்கட்டுத் தென்புற ஜகதிப் படையில் உள்ள சாசனம் கூறுகிறது.இக்கல்வெட்டின் மூலம் இக்கோயிலின் பழைய பெயர் இளந்திருவேங்கடமுடையார் என்பது தெரிய வருகிறது.மேலும் அம்பத்தூர் நாட்டு விசைய நுளம்பியாறு என ஊர் வழங்கப்பட்டதை அறிகிறோம்.திருப்பதியைத் திரு வேங்கடமுடையான் என்பது போல் இங்கு இளம்திருவேங்கடமுடையான் என சுவாமி வழங்கப்பட்டுள்ளார்.

இரண்டாவது கல்வெட்டு விஜயகண்ட கோபாலானாகிய தெலுங்குச் சோழன் காலத்தில் நம்பிமார் கையில் கொடை தந்த விவரத்தைக் குறிப்பிடுகிறது.

உண்ணாழியின் தென்புறச் சுவரில் உள்ள விஜயநகர வேந்தன் தேவராயனின் சிற்றரசன் பொம்மையதேவ மகராயன் கோயிலில் விளக்கு எரிக்க தானம் தந்துள்ளான்.காலம் கி பி 1436 ஆகும்.

கோயில் கருவறை இடைக்கட்டு ,முன்மண்டபம் மட்டுமே கிபி 13ஆம் நூற்றாண்டாகும்.மகாமண்டபமும் பிரகார மண்டபமும் கோயிலில் உள்ள பிற சன்னதிகளிம் சமீபக் காலத்தவையாகும்.கிழக்கு நோக்கியுள்ள இராஜகோபுரம் ஏழு நிலைகளில் உள்ளது.இதுவும் சமீபக் காலத் திருப்பணியாகும்.

இறுதியாக 24.06.2009 இல் திருப்பணி முடிந்து கும்பாபிஷேகம் நடந்துள்ளது.சில சன்னதிகள் 24.06.2005 இல் கட்டி முடிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடந்துள்ளது.கருவறை அதிட்டானம்,சுவர் இரண்டுமே கலை நுட்பம் வாய்ந்தவையாக உள்ளன.அதிட்டான உறுப்புகளான உபானம்,ஜகதி,பட்டி,கண்டம்,குமுதம் போன்றவற்றைக் கொண்டுள்ளது.சுவர் எனப்படும் கால் பகுதி,அரைத்தூண்கள்,உருளை வடிவத் தூண்கள்,கோஷ்டங்கள்,தோரணங்கள் என அமைந்துள்ளது.சிறுசிறு புடைப்புச் சிற்பங்கள் சுவர்ப்பகுதியில் உள்ளன.குறிப்பாகக் காளிங்கநர்த்தனர்,வேணுகோபால்,தேவியருடன் விஷ்ணு,விநாயகர்,நாட்டியப்பெண்,மத்தளம் அடிக்கும் ஆடவர் போன்ற சிற்பங்களும் யாளி,அன்னப்பறவை,சிம்ம உருவங்களும் மற்றும் யானை உருவங்களும் எழில் மிகுந்தவையாகும்.விமானம் வேசர அமைப்பில் உள்ளது.

பாண்டியர் கட்டிய கோயில் என்பதால் கோஷ்டங்களில் கோஷ்ட சிற்பங்கள் வைக்கப்படவில்லை.பிரஸ்தரம்,கிரீவம்,சிகரம்,செங்கல் சுதையாகும்.ப வடிவ பிரகார மண்டபமும்,மகாமண்டபமும் விமானத்தின் மேற்பகுதியைக் காணமுடியாதவாறு உள்ளன.கோயிலில் மடைப்பள்ளி,சர்வசக்தி விநாயகர் சன்னதி,சந்தானலட்சுமி அம்மன் சன்னதி ,ஆண்டாள் சன்னதி,ஐயப்பன் சன்னதி,நவக்கிரக சன்னதி,கொடிமரம்,பலிபீடம்,கருடன் சன்னதி ஆகியவையும் உள்ளன.தரைப்பகுதி நவீன மார்பில் கற்களால் அமைக்கப்பட்டுள்ளன.1949 இல் நடந்த திருப்பணிக்குப் பிறகும் பழைய கட்ட அமைப்பும் சாசனங்களும் கோயிலின் தொன்மைக்கு ஆதாரங்களாய் உள்ளன.நுழைவாயிலின் அருகே கஜேந்திர மோட்ச காட்சி புடைப்புச் சிற்பமாக உள்ளது.



சென்னை முகப்பேர், அருள்மிகு சந்தான சீனிவாசப்பெருமாள் திருக்கோயில் இராஜகோபுரம்



கொடிமரம் கருடன் சன்னதிமற்றும் மண்டபம்



விஜயநகர மன்னர் தேவராயர் கல்வெட்டு



சாளுவ பொம்மைய தேவர் பெயருள்ள கல்வெட்டு



பாண்டியர் கல்வெட்டு



ஆதிகேசவப்பெருமாள் என்ற பெயருள்ள 1949ஆம் ஆண்டு கல்வெட்டு





கருவறைத் தென்புறச் சுவரில் உள்ள கோஷ்டம்



சிற்றுருவத்துடன் முழுத்தூண் கொண்ட தோரணம்



தேவியருடன் விஷ்ணு புடைப்புச் சிற்பம் உள்ள தோரணம் முழுத்தூண்கள்

கஜலட்சுமி புடைப்புச் சிற்பத்துடன் தோரணமும் கோஷ்டமும் முழுத்தூண்கள்



வேணுகோபால் புடைப்புச் சிற்பம்



யாளி வரிசை அதிட்டானத்துடன் சுவரில் கோஷ்டம்



யானை மற்றும் விநாயகர் புடைப்புச் சிற்பம்



ஆண்டாள் சன்னதி



சந்தானலட்சுமி சன்னதி



யானையை முதலை பிடித்தல் (கஜேந்திர மோட்சம்) புடைப்புச் சிற்பம்